# 50 நாள் உபவாச ஜெபம்
## ஜெப குறிப்புகள் #2

## ஜெப கவனம்: தரிசனம் 2030

1. தரிசனம் 2030-க்காக ஜெபியுங்கள். தரிசனம் 2030 என்பது 2030-ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்தியாவில் உள்ள திருச்சபை இல்லாத 4 லட்சம் கிராமங்களிலும் திருச்சபைகளை ஸ்தாபிப்பதே!
2. இந்தியாவில் உள்ள அனைத்துத் திருச்சபை ஸ்தாபனங்களும், ஊழியர்களும் இந்த தரிசனத்தை பற்றிக்கொண்டு **ஒரே தரிசன சிந்தையோடு** ஓட ஜெபிப்போம்!
3. ஆவியிலும் நோக்கத்திலும் ஒருமனம் கொண்ட தலைவர்களை தேவனே ஒருங்கிணைத்து, இந்த தரிசனத்தில் இவர்கள் இணைந்து செயல்படவும், இதனால் ஓர் நற்தாக்கத்தை தேவ ராஜ்ஜியத்தில் காணவும் ஜெபிப்போம்!
4. இந்தியாவிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் (776 மாவட்டங்கள், தற்போது) “நெகேமியா” போன்ற தலைவர்கள் எழும்ப ஜெபிப்போம். ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 1000 கிராமங்களும், 10-20 லட்சம் மக்களும் உள்ளனர். எல்லா சவால்களையும் மேற்கொண்டு, குறுகிய காலத்தில் பெரிய பணியை செய்யக்கூடிய “நெகேமியாக்கள்” எழும்ப ஜெபிப்போம்!
5. துல்லியமான தகவல்களை பேரார்வ மன்றாட்டு ஜெபத்துடன் அதனை ஓர் செயல் திட்டமாக மாற்றி, சௌகரிய “அரண்மனை” சொகுசு வாழ்விலிருந்து வெளிவரும் “நெகேமியாக்கள்” எல்லா மாவட்டங்களிலும் எழுப்பப்பட ஜெபிப்போம்!
6. பெரிய தேவத் திட்டத்திற்கு தேவையான உபகரணங்களை சேகரிக்கவும், அனைவரையும் ஒருங்கிணைக்கவும், உபத்திரவம் மற்றும் எதிர்ப்புகள் ஆகியவற்றைத் தாங்கக்கூடிய கிருபையையும் சத்துவத்தையும் கொண்ட “நெகேமியாக்கள்” எல்லா மாவட்டங்களிலும் எழுப்பப்படவும் ஜெபிப்போம்!
7. இந்த தேசிய அளவிலான பெரிய தரிசனத்திற்குத் தேவையான ஜெபப் பங்காளர்கள் ஆயிரங்களில் எழும்ப ஜெபிப்போம். அநுதினமும் தரிசனம் 2030-க்காக ஜெபிக்கும் 10,000 மன்றாட்டு வீரர்களை கர்த்தர் எழுப்பும்படி ஜெபிப்போம்!
8. இந்தியாவின் எல்லா மூலை முடுக்குகளிலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட “தெய்வச் செயல்களும்”, அற்புதங்களும், அடையாளங்களும் ஏராளமாக நடைபெறும்படியாகவும், இந்த தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு ஓர் தெய்வீக உந்துதலும் தெய்வீக வேகமும் உண்டாகவும் ஜெபிப்போம்!
9. இந்த மாபெரும் தரிசனம் நிறைவேறத் தேவையான உபகரணங்கள் தடையின்றி அருளப்பட ஜெபிப்போம். அத்துடன், தரிசன செயல்பாட்டினை கவனிக்கும் பொறுப்பாளர்கள், உக்கிராணத்துவ உணர்வுடன் உபகரணங்களை கையாள ஜெபிப்போம்!
10. தரிசனத் தலைவர்களுக்கு தெய்வீகப் பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்! ஒவ்வொரு தரிசனத் தலைவர்களுக்காகவும் மன்றாட ஏராளமான தனிப்பட்ட மன்றாட்டு ஜெப வீரர்கள் எழுப்பப்பட ஜெபிப்போம்! எதிரியின் கண்களுக்கு முன்னணித் தலைவர்கள் மறைக்கப்பட ஜெபிப்போம்!